மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 03 வியாழக்கிழமை ( 16 - 03 - 2000 ) VALAMPURI ஒலி: 88

## நோர்வே உதவியுடனான

# சமாதான முயற்சிகளைக்கண்டித்து

# கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி!

## இனவாத அமைப்புகள் போர்க்கொடி

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு நோர்வே அரசின் ஒத்தாசையுடன் எடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளைக் கண்டித்து பயங்கரவாதத்திற்கு எதிரான தேசியஅமைப்பும் சிங்கள வீரவிதான இயக்கமும் இணைந்து கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் நோர்வே அரசின் சமாதான முயற்சியைக் கண்டித்தும் ஜனாதிபதி ரணில் பேச்சுவார்த்தையைக் கண்டித்தும் சுலோகங்களுடன் கோஷங்களும் எழுப்பபப்பட்டன.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு அரசியலமைப்புச் சீர் திருத்தம் தொடர்பாக நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் எடுத்து வரும் சமாதான முயற்சிகளைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று கொழும்பில் நடாத்தப்பட்டது.

நேற்று மாலை 4.30 மணியளவில் பொறளைச் சந்தியிலிருந்து ஆரம்பமான இப் பேரணி கோல்டன் பிளேஸ் ஊடாக வாட்பிளேஸை

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டக்காரர் தாங்கிச் சென்ற சுலோகங்களும் கோஷங்களும்

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய அமைப்பினாலும் சிங்கள வீரவிதானஇயக்கத்தினராலும் நடாத்தப்பட்டஆர்ப்பாட்ட பேரணியில் எழுப்பப்பட்ட கோஷங்கள் வருமாறு

★ இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் நோர்வே அரசே தலையிடாதே

★ மனிதர்களை கொன்று குவிக்கும் விடுதலைப் புலிகளு

(8ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் வெள்ளைவான் கடத்தல் 2பெண் உட்பட நால்வர் கடத்தப்பட்டனர்

(வவுனியா)

நேற்று முன்தினம் வவுனியாவில் வெள்ளை வானில் வந்தவர்களினால் இரு பெண்கள் உட்பட நால்வர் கடத்தப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் காணாமல்போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

வாதரவத்தை புத்தூரைச் சேர்ந்த பொன்னம்பலம் சுதாகரன் (வயது 21)என்ற இளைஞர் நேற்று நீர்வேலிப் பகுதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் ஒரு வியாபாரி என்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கோரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் படையினரால் கைது செய்யப் படுவோருக்கு ரசீது வழங்கும் நடை முறை இதுவரை அங்கு அமுல்படுத்தப்படவில்லை.

இது குறித்து வவுனியா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணைப்பதிகாரி எஸ். சிறிதரன் பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். (ந)

## அன்ரன்பாலசிங்கம்

## ஜனாதிபதியின் அனுமதியின்றியே நோர்வே நாட்டுக்குச் சென்றார்

(கல்முனை)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே சென்றது ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அனுமதியுடனேயே என்பதை நிராகரித்து நோர்வே வெளிநாட்டமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதாக ஐரோப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அ.அதிபர் திணைக்கள தலைவர்கள் இந்திய பிரதித்தூதரைச் சந்தித்தனர்

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்துள்ள இலங்கைக்கான இந்தியப் பிரதித் தூதுவர் திருப்பதி யாழ். அரச அதிபர் உட்பட பல்வேறு திணைக்களத்தலைவர்களையும் சந்தித்துள்ளார்.

இவர் பலாலி இராணுவ முகாமில் இராணுவ பொலிஸ் உயரதிகாரிகளைச் சந்தித்த பின்னர் யாழ். அரச செயலகத்திற்கு வந்தனர். செயலகத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வையடுத்து அரச அதிபர் கே. சண்முகநாதன் தலைமையில் அரச திணைக்களத் தலைவர்கள் உயர் அதிகாரிகள் பத்திரிகை

( 8ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார்க் கடலில் புலிகள்-கடற்படை சமர்

(வவுனியா)

கடந்த 12 ஆம் திகதி மன்னார்க்கடலில் இடம் பெற்ற கடற்சமரின்போது ஒரு அதிவேக ரோந்துப் படகை தாம் அழித்ததாகவும் இதில் ஒரு கடற்படைச் சிப்பாய் கொல்லப்பட்டதாகவும், 4 படையினர் காயமடைந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இம் மோதலில் தமது தரப்பில் கடற் கரும்புலிகளான மேஜர் பரதன்(சதாசிவம் சந்

( 8ஆம் பக்கம் பார்க்க)

## இராஜகிரிய குண்டு வெடிப்பு மேலும் 9பேர் கைது

### இதுவரை 17பேர்கைதாகினர்

(கொழும்பு)

இராஜகிரியகுண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக மேலும் 9 சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஒன்பது பேரும் கொழும்பு செட்டித்தெருவில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டுச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட தடயப்பொருட்

[8ஆம் பக்கம் பார்க்க]

## யுத்தக் கைதிகளை விடுதலை செய்ய அரச குழு விரைவில் வன்னி பயணம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அரசின் உயர் மட்டக்குழுவொன்று விரைவில் வன்னி செல்லவுள்ளது.

இக்குழுவில் நீதி அரசியலமைப்பு விவகாரப் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா பொலநறுவை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நந்தசேன ஹேரத், அனு

[8 ஆம்பக்கம் பார்க்க]

## பொ.ஐ. மு. - ஐ. தே கட்சி தலைவர்கள் இன்று சந்திக்கிறார்கள்

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை இன்று அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறவிருக்கும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் பொதுவான

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புத் தலைமையகங்கள் ஜெயவர்தனபுரவுக்கு மாற்றம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள முப்படைத் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சு பொலிஸ் தலைமையகம் ஆகியன சிறி ஜெயவர்த்தனபுர புரவிற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்போது கோட்டேப் பகுதியில் இத்தலைமையகங்கள் அமைந்துள்ள 93ஏக்கர் காணியின் பெறுமதி 21பில்லியன் ஆகும்.

கோட்டேப் பகுதியை

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

**பலம்மிக்க யந்திரங்கள்**

ஆலயங்களுக்கும், இல்லங்களுக்கும், வியாபாரஸ்தாபனங்களுக்கும் பலம்மிக்க லக்ஷ்மி கடாச்ச யந்திரங்கள் மற்றும் தோஷ, கடன் தொல்லை, பயம், தடைகள் வெளிநாடு செல்வோர்க்கும் பாதுகாப்பு ஆகிய பலவற்றிற்கும் அவர் அவர் நட்ஷத்திரம், பெயர், ஊர்அல்லது ஒராம்ம் இவைகளை கணித்து மந்திராலய மகானின் அருள் ஆசியுடன்தரப்படும் வேண்டு. பவர்கள் ஸ்ரீராகவேந்திர மருத்திக்கா 159A, கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

# தமிழ் மொழி பாடநூல்களில் இடம்பெறும் தவறுகளை திருத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## வடக்கு-கிழக்கு ஆளுநர் உறுதி

[கொழும்பு]

தமிழ்மொழிமூலப் பாடநூல்களில் இடம்பெறும் தவறுகளைத் தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன உறுதியளித்துள்ளார்.

தமிழ்மொழி மூலப் பாடநூல்களில் இடம்பெற்று வரும் தவறுகள் குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தூதுக்குழு விரிவாக நேரில் சென்று எடுத்துக் கூறியதையடுத்தே இவ் உறுதிமொழி வழங்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

இதனடிப்படையில் தமிழ் மொழி மூலப் பாடநூல்கள் அச்சிடப்படுவதற்கு முன்பாக வடக்குக் - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டு அவற்றிலுள்ள பிழைகள் பூரணமாகத் திருத்தப்பட்ட பின்னரே அச்சிடுவதற்கு அனுமதிக்கப்படும்.

தமிழ் மொழி மூலப் பாடநூல்களில் காணப்படும் வரலாற்றுத் திரிபுகள் கருத்து முரண்பாடுகள் திணிப்புக்கள் குறித்தும் இச்சந்திப்பில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அத்துடன்,

முதலாம் தவணைக்கு முன்பதாக பாடசாலைகளுக்கான முழுமையான பாடநூல் விநியோகத்திற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் ஆளுநர் தூதுக் குழுவினரிடம் உறுதியளித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

(க-9)

## இளைஞர் அணி தாக்கு

யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (படையப்பா) திரைப்படம் பார்க்க மதுபோதையில் வந்த இளைஞர் அணி ஒன்று அங்கு கடமையாற்றும் ஊழியரைத்தாக்கியுள்ளது.

மேற்படி சம்பவத்தில் இணுவிலைச் சேர்ந்த பரமசாமி வாமதேவன் என்பவர் காயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-49)

## இல்லமெய்வல்லுநர்போட்டி

(அச்சுவேலி)

யாழ். கோப்பாய் மகாவித்தியாலயவருடாந்த இல்ல மெய்லல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் அ. அகிலதாஸ் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு, யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஞா. தெய்வேந்திரராசா பிரதம விருந்தினராகக்கலந்துகொள்கின்றார். (செ-57)

யாழ். காட்டுப்புலம் அ. மி. த. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக் கிழமை பி. ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார், (செ)

★ ★ ★

யாழ். சன்மார்க்க மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று வியாழக் கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் து. நடராஜலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளதால் இப்போட்டிக்கு யாழ். கல்விவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா. வரதராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். [செ]

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப. 2.00மணிக்கு புனித மரியாள் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு, வடக்கு—கிழக்கு மாகாண யாழ். பிரதேச ஆணையாளர் ஏ.ஜி.செபநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ)

## கல்விச் சுற்றுலா

(மந்துவில்)

பலாலி ஆசிரியர் கலாசாலையை சேர்ந்த பயிற்சி ஆசிரியர்கள் ஏப்ரல் மாத காலப் பகுதியில் கலாசாலை விடுமுறையின் போது அகில இலங்கை ரீதியில் கல்வி சுற்றுலா ஒன்றை மேற் கொள்ள உள்ளனர்.

இச்சுற்றுலாவில் சகல துறை பயிற்சி ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

முன்னேற்பாடாக சுற்றுலா செல்லவுள்ளவர்களின் பெயர் பதிவு செய்யப்பட்டு வருகிறது. இச்சுற்றுலா பதினொரு நாட்கள் இடம்பெறும் இச்சுற்றுலாவின் போது பத்து இடங்களுக்குச்செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-39)

## (இராசி பலன்)

16.03.2000
வியாழக்கிழமை
(தமிழுக்கு பங்குனி - 03)

ஏகாதசி மாலை 5.08 வரை, பூசம் இரவு 7.49 வரை, இராகுகாலம் பகல் 2.21 முதல் 3.51 வரை, சுபநேரம் காலை 8.19 முதல் 9.49 வரை, அமிர்தசித்த யோகம் ஸர்வ ஏகாதசி விரதம்.

**மேடம்:**
போட்டி உருவாகுதல், மனக்குறை, தொழில்கஷ்டம்

**இடபம்:**
வெளியூர் தகவல், குடும்ப சுகம், புதியமுயற்சி.

**மிதுனம்:**
தவறானசித்தை, காரியத் தடை, வருவாய்பாதிப்பு.

**கடகம்:**
பெண் நட்பு, அதிகவருவாய், உல்லாசப்பயணம்.

**சிங்கம்:**
பெறுப்பற்ற நிலை, உறவினர் தொல்லை, புதிய கடன்.

**கன்னி:**
குடும்பநிம்மதி, தாயன்பு, தொழில் முதலீடு.

**துலாம்:**
விசித்திரசிந்தனை, அவசர பயணம், கலைஞானம்

**விருச்சிகம்:**
சகோதர கோபதாபம், வாகனச்செலவு, மனச்சலிப்பு.

**தனுசு:**
தாழ்ந்தநிலை, இனம்புரியாத கவலை, வம்புதும்பு.

**மகரம்:**
பெற்றோர் அறிவுரை, மனமகிழ்ச்சி, நண்பர் உதவி.

**கும்பம்:**
வாக்குவசீகரம், மனைவி பாராட்டு, பொதுப்பணி.

**மீனம்:**
கருத்துவேற்றுமை, அயலவர்பகை, முயற்சித்தடை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

# வடக்கின் பெரும் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், யாழ். பரியோவான் கல்லூரி அணிக்கும் இடையில் ஆண்டு தோறும் நடைபெற்று வரும் 'வடக்கின் பெரும் மோதல்' என அழைககப்படும் துடுப்பாட்டப்போட்டி (பிக்மச்) மிலேனியம் ஆண்டில் முதல் முறையாக நாளை மறுதினமும் காலை 9.30 மணி முதல் மாலை 5.40 மணி வரை நடைபெறவுள்ளது.

1901-ஆம் ஆண்டு இவ்விரு அணிகளுக்குமிடையில் ஆரம்பிக்கப்பட்ட இம் மோதலானது இது வரை 93 மோதல்களைச் சந்தித்துள்ளது.

நடந்து முடிந்த மோதல்களில் 32 தடவைகள் பரியோவான் கல்லூரியும் 21 தடவைகள் மத்திய கல்லூரியும் வெற்றியீட்டியுள்ளன.

32 மோதல்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. 8 மோதல்கள் பற்றிய ஆவணங்கள் சேதமடைந்துள்ளமையால் அவை பற்றி அறிய முடியாதுள்ளது.

94-வது தடவையாக நடைபெறவுள்ள இத் துடுப்பாட்டத்தில் பங்கு பற்றும் இரு அணிகளினதும் அணி வீரர்களின் பெயர் விபரம் வருமாறு.

**யாழ். மத்திய கல்லூரி அணி**

1) பி. கஜிதரன்
(அணித் தலைவர்)
2) கே. பிரகாஷ்
(உபதலைவர்)
3) ரி. தினேஷ்
4) எஸ். ரஜீவ்
5) எஸ். கிருஷ்ணா
6) வி. அகிலராஜ்
7) கே. றோகான்
8) ஏ. லக்ஸ்மன்
9) எஸ். நவநீதன்
10) ஏ. துரன்
11) எஸ். பிருந்தாவன்
12) எஸ். கார்த்தீபன்
13) வி. ரஜீவ்குமார்
14) எஸ். பிறோனிசன்
15) ஜே. ரெனின்
16) என். சசிகரன்
17) ஆர். மதுசன்

**பரியோவான் கல்லூரி அணி**

1) ஏ. டினேஷ்பெனிஸ்ரர்
(அணித் தலைவர்)
2) ரி. ரஜீவ்
(உபதலைவர்)
3) டி. தேவதாசன்
4) எஸ். தேவசியன்
5) ரி. ராகுலன்
6) ஆர். ரட்ணம்
7) பி. பிரதீபன்
8) வி. விஷ்ணுவரதன்
9) பி. லாவேந்திரா
10) சி. அகிலன்
11) ஏ. சிவதர்சன்
12) பி. பிரியந்தா
13) எஸ். ராஜராம்
14) எஸ். சஞ்ஜித்
15) ஆர். பிரகதீஸ்வரன்
16) எஸ். முகுந்தன்
17) ஜே. அமலசீலன்

(செ-22-59-76)

# கோட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்

(அச்சுவேலி)

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

15 வயதுப் பிரிவு

★ 1 ஆம் இடம் யாழ். இடைக்காடு ம. வி.

★ 2 ஆம் இடம் யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

★ 3 ஆம் இடம் யாழ். அச்செழு சைவப்பிரகாச வி

17 வயதுப் பிரிவு

★ 1 ஆம் இடம் யாழ். சோமஸ்கந்தா கல்லூரி.

★ 2 ஆம் இடம் யாழ். அத்தியார் இந்துக்கல்லூரி.

★ 3 ஆம் இடம் யாழ். இடைக்காடு ம. வி.

19 வயதுப் பிரிவு

★ 1 ஆம் இடம் யாழ். சோமஸ்கந்தா கல்லூரி.

★ 2 ஆம் இடம் யாழ். இடைக்காடு ம. வி.

★ 3 ஆம் இடம் யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. (செ-57)

# வலி. வலய பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட கால் இறுதிப்போட்டி

(இளவாலை)

வலி. வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப் பந்தாட்ட கால் இறுதிப் போட்டிகள் இன்று வியாழக் கிழமை பி. ப. 2 மணிக்கும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 2 மணி முதல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விபரம் வருமாறு.

17 வயதுப் பிரிவு

★ யூனியன் கல்லூரி எதிர் வட்டு மத்திய கல்லூரி.

★ சண்டிலிப்பாய் இந்துக கல்லூரி எதிர் இராமநாதன் கல்லூரி.

★ உடுவில் மகளிர் கல்லூரி எதிர் குளமங்கால் றோ.க.

19 வயதுப் பிரிவு

★ உடுவில் மகளிர் கல்லூரி எதிர் விக்ரோறியாக் கல்லூரி

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் மகாஜனாக் கல்லூரி.

★ யூனியன் கல்லூரி எதிர் இராமநாதன் கல்லூரி.

★ வட்டு. மத்திய கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

நாளை காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விபரம் வருமாறு.

15 வயதுப் பிரிவு

★ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் இராமநாதன் கல்லூரி.

★ மகாஜனாக் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி.

★ விக்ரோறியாக் கல்லூரி எதிர் இளவாலை கன்னியர் மடம் ம. வி.

★ குளமங்கால் றோ.க. எதிர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (செ-12)

# மின்னிணைப்புவயர்கள்போதியளவுஇல்லை தருவிப்பதற்கு துரித எற்பாடு

## மின்சார சபை தெரிவிப்பு

(அச்சுவேலி)

மின்பாவனையாளர்களுக்குரிய மின்இணைப்பினை உரிய நேரத்தில் வழங்குவதற்கு கையிருப்பில் போதிய மின்னிணைப்பு வயர்கள் இல்லாதிருப்பதாக மின்சார சபை வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் மின்னிணைப்பு பெறுவதற்கும் புதிதாக மின்னிணைப்பு பெறுவதற்கும் நூற்றுக்கணக்கானோர் பணம் செலுத்திவிட்டு காத்திருக்கின்றனர். தற்சமயம் போதிய மின்னிணைப்பு வயர்கள் கையிருப்பில் இல்லாததன் காரணத்திலேயே உடனடியாக மின்னிணைப்புகளை வழங்கமுடியாது உள்ளது.

மின்னிணைப்பு வயர்களுக்கு நிலவிவரும் தட்டுப்பாடு சம்பந்தமாக கொழும்பில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு அவை கப்பல்மூலம் அனுப்பிவைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மற்றும் மின்சாரம் விநியோகத்திற்கான கேபிள்களுக்கும் தட்டுப்பாடு நிலவிவருவதால் இவற்றையும் பெற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி மின்னிணைப்பிற்குரிய வயர்கள் மற்றும் மின்சார கேபிள்கள் போதிய அளவு இங்கு வந்தடைந்தும் குடாநாட்டில் மின்சாரம் பெறுவதற்கு காத்திருக்கும் அனைத்து மின்பாவனையாளர்களுக்கும் உரிய முறையில் மின்சாரம் வழங்கக்கூடியதாக இருக்கும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (க-14)

## வடக்கு-கிழக்கு பாடசாலைகளில் விரைவில் கையெழுத்து சஞ்சிகைப்போட்டி

(கோப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளுக் கிடையே யான கையெழுத்து சஞ்சிகை போட்டியை நடாத்தும் ஏற்பாடுகள் துரித கதியில் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மாகாண அமைச்சின் கல்விப்பணிப்பாளரிடமிருந்து கிடைத்த பணிப்புரையை அடுத்தே மேற்படி ஏற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வழமை போன்ற பாடசாலைமட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாகாண மட்டம் போன்ற அடிப்படையில் போட்டிகள் இடம் பெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-79)

### இடைக்காடு - யாழ்ப்பாணம்

## பாடசாலை பஸ் சேவை சீரில்லை மாணவிகள் மத்தியில் விசனம்

(அச்சுவேலி)

இடைக்காட்டிலிருந்து யாழ்ப்பணப் பாடசாலைகளுக்கு பெண் பிள்ளைகளை ஏற்றிச் செல்வதற்கென வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் சேவைக்கு அனுபபப்படும் பேருந்துகள் காலையில் உரிய நேரத்திற்கு மாணவியர்களை ஏற்றிச் செல்லத் தவறுவதையிட்டு அதில் பிரயாணம் செய்யும் மாணவிகளும் அவர்களது பெற்றோர்களும் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

ஆண்களுக்குரிய பேருந்துகள் உரிய நேரத்திற்கு சேவையை ஆரம்பித்து வருகின்றபோதிலும் பெண்களுக்குரிய பேருந்துகள் உரிய நேரத்திற்கு சேவையை ஆரம்பிக்காது சற்றுத் தாமதாகவே வந்து சேர்வதால் அதில் பயணம் செய்யும் மாணவிகள் தினமும் ஒரு பாடவேலை கழிந்த நிலையிலேயே பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தினமும் ஆளாகி வருவதுடன் தினமும் முதாலம் பாட வேளையைத் தவறவிட்டு வருகின்றனர். (க-14)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர்.

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 15 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

| | |
|---|---|
| 135338 ஏ | 135339 ஏ |
| 35351 ஏ | 135354 ஏ |
| 135392 ஏ | 135399 ஏ |
| 135402 ஏ | 135403 ஏ |
| 135407 ஏ | 135412 ஏ |
| 135715 ஏ | 137595 ஏ |
| 137631 ஏ | 137674 ஏ |
| 137679 ஏ | 137689 ஏ |
| 137689 பி | |

சாவகச்சேரி

| | |
|---|---|
| 130507 ஏ | 130507 பி |
| 130507 சி | 131448 ஏ |
| 131483 ஏ | 131483 பி |
| 131493 ஏ | 131493 பி |
| 131530 ஏ | 131530 பி |
| 135436 ஏ | 135436 ஏ |
| 135441 ஏ | 135469 ஏ |
| 135473 ஏ | 135473 பி |

கரவெட்டி

| | |
|---|---|
| 127601 ஏ | 129625 ஏ |
| 129672 ஏ | 130889 ஏ |
| 130918 ஏ | 132443 ஏ |
| 132443 பி | 132450 ஏ |
| 132450 பி | 132468 ஏ |
| 132469 ஏ | 132901 ஏ |
| 135005 ஏ | 135006 ஏ |
| 135017 ஏ | 135092 ஏ |
| 135153 ஏ | 135164 ஏ |
| 135164 பி | 135196 ஏ |
| 135252 ஏ | 135273 ஏ |
| 135274 ஏ | 135274 பி |
| 135274 சி | 135274 டி |
| 135329 ஏ | 135337 ஏ |

பளை

| | |
|---|---|
| 131894 ஏ | 131894 பி |
| 131894 சி | 131903 ஏ |
| 131903 பி | 131912 ஏ |
| 131912 பி | 131913 ஏ |
| 131913 பி | 131913 சி |
| 131913 டி | 131917 ஏ |
| 131927 ஏ | |

பருத்தித்துறை

| | |
|---|---|
| 129763 ஏ | 129763 பி |
| 131162 ஏ | 135151 ஏ |
| 135151 பி | 135151 சி |
| 135217 ஏ | 135298 ஏ |
| 135299 ஏ | 135317 ஏ |
| 135330 ஏ | 135349 ஏ |
| 135353 ஏ | 135353 பி |
| 135353 சி | 135369 ஏ |
| 135386 ஏ | 135421 ஏ |
| 137635 ஏ | 137637 ஏ |
| 137639 ஏ | 137640 ஏ |
| 137659 ஏ | 137703 ஏ |
| 137768 ஏ | 137769 ஏ |



## தவக்கால சிந்தனை

9 ஆம் நாள்

வண்டில் ஓட நல்ல அச்சாணி தேவை எம் வாழ்க்கை என்ற வண்டில் ஓட முயற்சி என்ற அச்சாணி தேவை. போர் முழுக்கம் நிற்ககதியிழந்து வாழ்வோர். எம்மில் பலவுண்டு வாழ்வின் துன்பங்களைக் கண்டு உடல் சோர்ந்து போகலாம் நம் உள்ளம் சோர்ந்து போகக் கூடாது. காரணம் மனிதன் அழியக் கூடிய உடலையும் அழியாத ஆன்மாவையும் கொண்டுள்ளான்.

மத் 7;7-12 வசனங்களில் கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் தேடுங்கள் நீங்கள கண்டடைவீர்கள் தட்டுங்கள் உங்களுக்கு திறக்கப்படும் தேவைகள் ஏற்படும் போது நமக்கு புதியவை தோன்ற வழி பிறக்கிறது. தேடுங்கள் உலக இச்சைக்கு அடிமைப்பட்ட உங்கள் உள்ளத் தேடுங்கள் தட்டுக்கள் வாழ்வில் செய்த பிழைகளைக் கண்டு மனம் உருகி தந்தையிடம் மன்னிப்புக் கேளுங்கள். உங்கள் உள்ளத்தை தட்டிக் கேளுங்கள் இறை ஆவியை இறைவன் கொடுப்பார்.

நம்மை நல்வழிப் படுத்தும் இறைவார்த்தையைக் கேட்போம். இறை தந்தையைத் தேடுவோம். கட்டுவோம் தந்தைக்கும் நமக்கும் இடையேயான அன்புப் பாலத்தை மாறுவோம் இறை அரசின் சாட்சிகளாக.

R. ஜெயா

அரச உத்தியோகத்தர்

# வெளிநாடு செல்லும் விடயத்தில் புதிய முறை அமுல்படுத்தப்படும்

(கொழும்பு)

அரசு உத்தியோகத்தர் வெளிநாடு செல்வதில் அனுமதி வழங்குவது தொடர்பாக புதிய முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இம்முறையின் கீழ் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நிறுவனக்கோவையிலுள்ள 15ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பந்தியிலுள்ள சகல அம்சங்களும் ரத்துச் செய்யப்படும்.

10ஆம பந்திக்கான சீர்திருந்தங்கள் புதிய சுற்றறிக்கையினால் மாற்றப்படும்.

இம்மாற்றத்தின்படி உயரகாரிகளும் திணைக்களங்களின் சிரேஷ்ட பிரதித் தலைவர்களும் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் அதிகாரிகளும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முன்ஜனாதிபதியிடம் அனுமதி பெறவேண்டும்.

இதன்கீழ் கல்வி நடவடிக்கைகளுக்காகவும் உத்தியோக கடமைகளுக்காகவும் விளையாட்டு கலாச்சார நிகழ்வுகளுக்காகவும் அல்லது மருத்துவ வசதி பெற்றுக்கொள்ளவும் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்படும்.

மேற்படி காரணங்களுக்காக நாட்டைவிட்டு வெளியேறும் அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளிபேறுவதற்குப் 10 நாட்களுக்குமுன் ஜனாதிபதி செயலாளரிடம் தமது அனுமதிக்காக விண்ணப்பிக்க வேண்டும். (க-9)

## நீதிபதி பதவிஏற்பு

(புலோலி)

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் மல்லாகம் மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்ட உத்தியோகப்பற்றநீதிவானும் சமாதான நீதிவானுமாகிய திரு.சு பா. சுப்பிரமணியம் நேற்றுப் பதவியை ஏற்றுள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த இவர் கடந்த வருடம் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தலைவராகப்பணியாற்றினார்.

நீதிபதி இ.த. விக்னராஜாவே மல்லாகம் மாவட்ட நீதிபதியாகவும் பணியாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-52)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ். வாடகைக்கார் சங்கத்தின் புதிய நிர்வாகசபைத் தெரிவு கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை சங்கக்காரியாலயத்தில் இடம் பெற்றது.

புதியநிர்வாகசபையின் தலைவராக அ.குணசேகரம், உபதலைவர் அ.இரவீந்திரன் செயலாளர் பொ. தனபாலச்சந்திரன், உப செயலாளர் க. கமலதாசன், பொருலாளர் இ. செல்வராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஏனைய நிர்வாகசபை உறுப்பினர்கள் விபரம் வருமாறு: து. யோகராசா, வி. ராதா, க. சண்முகராசா, அ. லோறன்ஸ்.

பயணிகளின் நலன் கருதி உங்களுக்கு கார் சாரதிகள் தரும் இடையூறுகளையும் நீங்கள் வாகனத்தில் தவறுதலாக பொருட்களை விட்டாலும் எங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ளலாம் என யாழ். கார் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

* * *

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் அடுத்த மூன்று வருடங்களுக்கான நிர்வாகக் குழு உறுப்பினர் தெரிவு கடந்த 27 ஆம் திகதி மேற்படி சபா மண்டபத்தில் இடம் பெற்றது.

தலைவர் சோ. பத்மநாதன், உப. தலைவர்கள் க. சிவானந்தன். வி. கே. பஞ்சமூர்த்தி. இணைச் செயலாளர்கள் எஸ். பத்மலிங்கம், வி. சிவஞானசேகரம், பொருளாளர் சு. பாலசண்முகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

11 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும்தெரிவு செய்யப்பட்டனர். (க)

### யாழ். வைத்தீஸ்வராவில் இடம்பெற்ற

## வடமாகாண ஆசிரியர் சகாயநிதிகூட்டம் முக்கிய தீர்மானங்கள் நிறைவேறின

(யாழ்ப்பாணா)

வடமாகாண ஆசிரியர் சகாயநிதி சங்கத்தின் 66ஆம் ஆண்டிக்கான அங்கத்தவர்கள் ஒன்றுகூடலும் பொதுக் கூட்டமும் கடந்த 7 ஆம் திகதி வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது.

சங்கத்தலைவர் அ. பேரம்பலம்தலைமையில்நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் பெ. கமலநாதன் கலந்து கொண்டார்

இதுவரைகாலமும் மானிப்பாயில் இயங்கிவந்த வடமாகாண ஆசிரியர்சகாய நிச்தி சங்கத்தின் புதியபணிமனை சுன்னாகத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் பலர் கலந்து கொண்ட இவ்விழாவில் பின்வருவோர் செயற்குழுவில் இடம்பெற்றனர்.

தலைவர் - அ. பேரம்பலம் செயலாளர் - எஸ். வன்னியசிங்கம் பொருலாளர் - எம். எஸ். சிறிதயாளன். உபதலைவர் - எஸ். தங்கராஜா,

மேற்படி செயற்குழு ஒன்பதுபேர் கொண்டதாக தெரிவு செய்யப்பட்டது இக் கூட்டத்தில் 65ம் ஆண்டுக்கான அறிக்கையடங்கிய நூல் அங்கத்தவர்களுக்கு வழங்கப் பட்டது. (க-3)

## மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் இல்லை, நோயாளர் அவதி

(வவுனியா)

மல்லாவி வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வாகனம் இன்மை காரணமாக 17 நோயளர்கள் மேலதிக சிகிச்சைக்கு வவுனியா வருவதற்கு காத்து இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்புலன்ஸ் வாகனம் இவ் வைத்தியசாலைக்கு இருப்பின் ஒருசீரான நிலையில் நோயாளர்கள் வவுனியா எடுத்துவரப் படும் போது பாதிப்புகள் ஏற்படாது எனவும் அங்கு வாகனம் இல்லாததால் நோயாளர்களை வவுனியா எடுத்து வருவதில் தாமதம் ஏற்படுவதால் பலர் காத்திருக்கும் நிலை ஏற்படுகிறது.

இதேவேளை கடந்த காலங்களில் அவசர சிகிச்சைக்காக வவுனியா எடுத்து வரப்படாமையால் பல நோயாளார் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. [க-ச]

## ஸ்ரீபாத கல்விபியல் கல்லூரியில் சங்கீதப் பயிற்சிப் பிரிவு

(கண்டி)

இந்திய சங்கீத வித்துவான்கள் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கு போதனைக்காக சமூகமளிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கல்லூரியில் சங்கீதப் பாடமே ஒரு பாங்மாக கற்பிக்கப்பட்டு வருடறது.

இப் பயிற்சிக்கு மாணவர்களின் தொகை மிகக்குறைவாக இருப்பதால் தகுதியானவர்கள் இரு உட்பாலாரும் தோட்ட கட்டமைச்சு செயலாளர் கே. குகதாசனுடன் தொடர்பு கொள்ளும் படி தெரிவிக்கப்படுகிறது. (து)

## உலக வங்கி குழுவினர் வவுனியாவிற்கு விஜயம்

(வவுனியா)

வவுனியா வரும் உலகவங்கிக் குழுவினர் அங்குள்ள நலன் புரிநிலையங்களுக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

இவர்கள் யூ.என்.எச்.சி. ஆர்.பிரதிநிதியைச் சந்திப்பார்.

மூன்றுபேர்கொண்ட உலகவங்கி குழுவினர் வியாழக்கிழமை உத்தியோகபூர்வ விஜயம் மேற்க்கொண்டு வரும் இவர்கள் வடக்கு கிழக்கு மாகாண விவசாய அபிவிருத்திதிட்டத்தின் கீழ் புனரமைக்கப் படஉள்ள 12 குளங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளனர். (ச-103)

## இச்சகத்தில் வாழ அருள்

கண்ணின் மணியே! கனிரசமே! கற்கண்டே!
வண்ணை உறையும் வயித்தீசா:- அண்ணலே!
அச்சம் அகன்று நாம் ஆர்க்கும்பின் செல்லாமல்
இச்சகத்தில் வாழ அருள்.

சொக்கன்

(யாழ். வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயமஹோற்சவத்தை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது.)

இந்தோனேசியாவின்

# படுகொலைச் சூத்திரதாரிகளை சட்டத்தின்முன் நிறுத்த இணக்கம்

## -அதிபர் வாஹிட் தெரிவிப்பு

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் 1960 காலப் பகுதிகளில், பெருந் தொகையானோர் கொலை செய்யப்பட காரணமானவர் களை இனம்கண்டு நீதியின் முன் நிறுத்த இந்தோனேசிய அதிபர் அப்துர் ரஹ்மான் வாஹிட் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் 1960 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டு தோல்வி கண்ட அதிரடிப் புரட்சியினைத் தொடர்ந்து, கொம்யூனிஸ்ட் என்று சந்தேகத்தின் பேரில் பல இலட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

மேலும் பலர் வழக்கு விசாரணைகள் ஏதுமின்றி தடுத்துவைக்கப்பட்டு இன்று வரை சிறையில் வாடுகின்றனர்.

இதுதொடர்பாக நீதி விசாரணைகள் நடாத்தி, கொலைகளுக்குக் காரணமானவர்களை இனம் கண்டு நீதியின் முன் நிறுத்தவேண்டும். எனப் பலகாலமாகவே கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்த போதும்,

தற்போது தோன்றியுள்ள ஒருமித்த எழுச்சிக் குரல்களை அடுத்தே இந்தோனேசிய அதிபர், விசாரணைகள் நடாத்த இணக்கம் கொண்டுள்ளார்.

இதேசமயம்.

மேற்படி கொலைகள் நடந்த 1960 காலப்பகுதிகளில் இந்தோனேசிய அதிபராக விளங்கியவர் ஜெனரல் சுகார்ட்டோ என்பது குறிப்பிடத்தக்கது (க-9)

# ஸ்பெயின் பொதுத் தேர்தலில் கொன்சவேற்றிவ் மக்கள் கட்சி அமோக வெற்றியீட்டியது

(லிஸ்பன்)

அண்மையில் நடந்து முடிந்த ஸ்பெயின் பொதுத் தேர்தலில் கொன்சவேற்றிவ் மக்கள் கட்சி வெற்றிவாகை சூடியுள்ளது.

இதனையடுத்து கொன்சவேற்றிவ் கட்சியின் தலைவரான அப்தர் (47 வயது) பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மொத்தமுள்ள 350 தொகுதிகளில் 183 இடங்களில் கொன்சவேற்றிவ் கட்சி பெரும்பான்மையை நிலை நிறுத்தியுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான சோஸலிஸக் கட்சி ஏற்கனவே தக்க வைத்திருந்த 142 தொகுதிகளில் 26 தொகுதிகளை இழந்துள்ளது.

(எஸ்-9)

# கிளிங்டன் மீதான விசாரணை விபரங்கள் வெளியாகும்

## கவுன்ஸில் அதிகாரி தகவல்

(வாஷிங்டன்)

கடந்த 6 ஆண்டுகளில் அமெரிக்க அதிபர் பில்கிளிங்டன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலன்விசாரணை விபரங்கள் தாக்கல் செய்யப்பட விருப்பதாக வைபோற்ற இண்டிபென்ரன் கவுன்ஸிலைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர்மீதான எஸ். பி. ஐ. எஸ்-900 புலன் விசாரணை கோவை பூர்த்தி செய்யப்பட்டதை அடுத்து மேற்படி அறிவிப்பு வெளியாகி இருப்பதாகத் தெரிய வருகிறது.

இதேசமயம், அதிபர் தனது அலுவலகத்தைவிட்டு வெளியேறிய பின்னரே எஸ். பி. ஐ. எஸ். புலன் விசாரணை விவரங்களை வெளியிடவிருப்பதாகவும், இவற்றில் எவையுமே குற்றவியல் தவறுகளல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்-9)

# மீண்டும்வெள்ள அனர்த்தம்ஏற்படுமா அச்ச நிலையில் மொஸாம்பிக் மக்கள்

(மபுட்டோ)

மொஸாம்பிக்கில் மீண்டும் ஓர் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயநிலை தோன்றியிருப்பதையடுத்து மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக நல்ல காலநிலை நிலவி வந்த போதிலும் திடீரென காலநிலையில் ஏற்பட்டுள்ள பாதகமான மாற்றமே மக்கள் மத்தியில் அச்சத்தைத் தோற்றிவித்துள்ளது.

முன்னர் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் உயிர் உடமை அழிவுகளினின்றும் மீள முடியாது தத்தளித்து நிற்கும் மொஸாம்பிக் மக்கள் மீண்டும்ஓர் வெள்ள அபாயத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கணக்கான சிறுவர் பெற்றோரைப்பிரிந்த நிலையில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரிந்து போன பலர் இன்னமும் தமது உறவுகளைத் தேடிக்கண்டுபிடிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

தொடரும் இந்த அவலங்களிடையே மீண்டும் ஏற்படப் போகும் வெள்ள அனர்த்தமானது மொஸாம்பிக்வாழ் குடிமக்களது இருப்பையே கேள்விக்குறியாகியுள்ளது.

இதேவேளை,

மொஸாம்பிக்கில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் எதிரொலியாக அதன் அயல் நாடான மடகஸ்காரில் அடுத்தடுத்து ஏற்பட்ட சூறாவளிகளில் 130 பொதுமக்கள் இறந்து போனமையும் தெரிந்ததே.

(க-9எஸ்)

# வறிய நாடுகளின் வெறுமைநிலை

(இலண்டன்)

உலகின் மிக வறிய பகுதிகளிலுள்ள 3மில்லியன் மக்களுக்கு சுகாதார வசதிகள் கிடைப்பதில்லை எனவும் அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர்க்கு தூய்மையான குடிநீரே கிடைப்பதில்லை எனவும் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-9எஸ்)

# மீள இராணுவ சேவைக்கு அழைப்பு சேர்பியாவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(இலண்டன்)

இராணுவச் சேவைக்கு வரும்படி தம்மை அழைக்கும் அரசின் புதிய உத்தரவை எதிர்த்து சேர்பியாவில் உள்ள இராணுவ றிசேவ்படையினர் ஆர்ப்பாட்டம் ஒன்றினை அண்மையில் நடாத்தியுள்ளனர்.

சேர்பியாவின் தென்நகரான கிரபின்யூ நகரில்வாழும் இந்தறிசேவ் படையினர், ஏற்கனவே இராணுவத்தில் சேவையாற்றியவர்கள் மேலதிகசேவையாற்றத்தேவையில்லை என விதிவிலக்கு அளிக்க வேண்டும் எனக்கோரியே மேற்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த எதிர்ப்பணியில்,200க்கும் மேற்பட்ட ஆண்களும் அவர்களுடைய குடும்பங்களும் பங்கு கொண்டன.

இதேசயம்,

கொசோவோசம்பந்தமாக நேட்டோ,சேர்பியாவுக்கிடையே போர் ஏற்பட்ட போது மேற்படி கிரபின்யூ நகரில் இருந்து 20ஆயிரத்துக்கும் மேற்பட்ட றிசேவ் இராணுவப் படையினர் கடந்த ஆண்டு போரில் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எஸ்-9)

# இஸ்ரேலிய சோதனைச் சாவடி மீது ரொக்கட் தாக்குதல் இருவர் பலி

(பெய்ரூட்)

தெற்கு லெபனானில் அமைந்துள்ள இஸ்ரேலியப் படையினரின் சோதனைச் சாவடி மீது தென்லெபனான் படை ரொக்கட் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இத்தாக்குதலில் இஸ்ரேலியப் படையைச் சேர்ந்த ஒருவரும் பொதுமகன் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளதாகவும் 3 பொதுமக்கள் காயமுற்றிருப்பதாகவும் தெரியவருகிறது.

ஒருமாத காலத்திற்கு முன் இஸ்ரேல் படையினர் ஹிஸ்புல்லா தீவிரவாதக் குழு மீது விமானத்தாக்குதல் மேற்கொண்டதையடுத்து இஸ்ரேலிய, தென்லெபனான் எல்லைப் பகுதியில் பதற்றம் தோன்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. (எஸ்-9)

# செய்திக் குவியல்

★ நேபாள மந்திரி சபையிலிருந்து இற்றைவரை 14 மந்திரிகள் பதவி விலகியுள்ளார்கள்.

★ மடகஸ்கார்தீவில்மீண்டும் புயல் மழை. பிரான்ஸ் உலங்கு வானஊர்திகளைத்தந்துள்ளது.

★ வியட்நாம் போரில் 30 இலட்சம்பேர் மரணமானதற்கு அமெரிக்காவே காரணம் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

★ மாதமொன்றிற்கு ஆயிரம் பன்னாட்டு மக்கள் அயர்லாந்துக்குள் பிரவேசம்.

★ குவைத்தில் வீட்டுப்பணி வேலைக்கு பெண்கள் செல்ல இந்தியா அனுமதி வழங்கியுள்ளது.

★ அமெரிக்காவில் உளவு பார்க்கும் சீனர்கள் தொகை அதிகரித்துள்ளது

★ பாகிஸ்தானிலுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கும்படி கவனஈர்ப்பு பிரேரணை வந்துள்ளது

★ பெற்றோரைத் தவறவிட்ட பிள்ளைகளும் பிள்ளைகளைத் தவறவிட்ட பெற்றோரும் மொஸாம்பிக் வீதிகளில் அலைகிறார்கள் என அறிவிக்கப்படுள்ளது. (எஸ்)

# பாகிஸ்தான் விஜயம் வேண்டாம் சிவசேனா கிளிங்டனுக்கு கோரிக்கை

(லாகூர்)

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அதிபர் பில்கிளிங்டன் விஜயம் செய்யக்கூடாதென்றும் அந்நாட்டை ஒரு பயங்கரவாத நாடாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்றும் இந்தியாவின் இந்து தீவிரவாதக்கட்சியான சிவசேனா கோரிக்கை விடுத்துள்ளது.

கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் சிவசேனா கட்சி அமெரிக்கா தூதரகத்துக்கும் உள்துறை அமைச்சுக்கும் இது பற்றிய அறிக்கை ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

கிளிங்டன் வருகையின் போது அவரைச் சந்திப்பதற்கும் சிவசேனா விருப்பம் றெிவித்துள்ளது. (எஸ்-து)

# கோவைசெழியன் காலமானார்

தமிழக அரசியலில் மிக உன்னத ஸ்தானம் வகித்தவர்களில் ஒருவரும் திரைப்படத்துறையிலும் தனது முத்திரையைப் பதித்தவருமான கோவைசெழியன் (வயது68) நேற்று முன்தினம் சென்னையில் மாரடைப்பால் காலமானார்.

அறிஞர் அண்ணா, எம். ஜி. ஆர். மு. கருணாநிதி முதலானோரிடத்து நெருங்கியதோழமை பூண்டிருந்த இவரது மறைவுக்கு பல பிரமுகர்கள் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

தமிழக முதல்வர் கருணாநிதியும் அனுதாபச்செய்தி ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

(எஸ்)

# மாற்று உறுப்பு சத்திரசிகிச்சை; கிளிங்டன் - பிளையர் கூட்டறிக்கை

(இலண்டன்)

மனிதபரம்பரை அலகுகள் சம்பந்தமான ஆய்வுத் தகவல்களை உலகிலுள்ள விஞ்ஞானிகள் சுதந்திரமான முறையில் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கவேண்டுமென்று அமெரிக்க அதிபர் கிளிங்டனும் பிரிட்டிஷ் பிரதமர்ரொனிபிளையரும்கோரியுள்ளனர்.

டிகருவிவிளைவுகள் அவற்றின்வேறுபாடுகள் சகல விஞ்ஞானிகளுக்கும் கிடைக்கவழிசெய்யவேண்டும் என்று கூட்டறிக்கைஒன்றில் இவர்கள் கூறியுள்ளனர்.

போம் (பிம்ப) இனப்பெருக்கமுறை மூலம் வலி என்ற ஆட்டுக்குட்டியை உருவாக்கிய பிரிட்டன் கம்பனி அதேமுறையில் பன்றிக்குட்டிகளை உற்பத்தி செய்திருக்கின்றது.

மார்ச் ஐந்தாம்திகதி ஐந்து பன்றிக்குட்டிகளை உற்பத்தி செய்திருக்கிறது. இந்த ஆராய்ச்சி மூலம் உற்பத்தியான பன்றிகளின் உறுப்புகள் மனித உறுப்புகளுக்கு மாற்று சத்திரசிகிச்சை செய்யும் போது பொருத்தலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த மாற்று உறுப்பு சத்திரசிகிச்சைக்கு உலகில் பல்லாயிரம்மக்கள் காத்திருக்கிறார்கள் என்று செய்திகள் கூறுகின்றன.

(து-எஸ்)

# உலக சாதனையை எட்டிப்பிடிக்கும் பி.பி.சி. நேயர்களின் எண்ணிக்கை

(இலண்டன்)

பி.பி.சி. உலக சேவை நேயர்களின் எண்ணிக்கை, உலக சாதனை அளவை எட்டியிருப்பதாக பி.பி.சி. உலக சேவைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி உட்பட 43 மொழிகளில் நடாத்தப்படும் இவ் ஒலிபரப்புச் சேவையில் நேயர்களின் எண்ணிக்கை 151 மில்லியனையும் தாண்டியுள்ள

மிகவும் போட்டிகள் நிறைந்து வரும் ஊடகத்துறையில் இது ஒரு பெரும் சாதனை எனக்கருதப்படுகிறது.

(க-9)

# உலக வலம்

# ஈரான் புரட்சித் தலைவர் கொலை தீவிரவாத அமைப்பு உரிமை

(தெஹ்ரான்)

ஈரான் நாட்டின் சீர்திருத்த இயக்கத் தலைவர் சஜித் ஹஜ்ஜாரியான் மீதான தாக்குதலுக்கு முஜாஹிதீன் அமைப்பு உரிமைகோரியுள்ளது.

ஈரான் நாட்டின் முக்கிய புரட்சியாளார்களைக் குறிவைத்து தமது தாக்குதல்கள் மேலும் தொடரும் என்றும் மேற்படி தீவிரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (எஸ்-9)

# பனை தென்னை நாட்டலில் அதிக நாட்டம் தேவை

## அரச அதிபர் வலியுறுத்து

(தென்மராட்சி)

"குடாநாட்டில் பல்வேறு தேவைகளுக்காகவும் பனை, தென்னை மரங்கள் கண்டபடி தறிக்கப்பட்டு வருகின்றன. இதனை ஈடுசெய்யும் பொருட்டு இங்கு பனை, தென்னை மரங்கள் அதிகளவில் நடுகை செய்யப்பட வேண்டும். உயர்தர தென்னம்பிள்ளைகளை வீட்டுத் தோட்டத்தின் கீழ் இங்கிருக்கின்ற ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா நான்கு கன்றுகளாவது கொடுக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் அவசியமாகச் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் தென்னை அபிவிருத்திச் சபையின் பொறுப்பதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் யாழ்ப்பாணத்து மக்களுக்கு நல்லினத் தென்னம்பிள்ளை கொண்டு வந்து விநியோகம் செய்யவேண்டும். அதற்கேற்ற வகையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அதேவேளை தென்னை அபிவிருத்திச் சபை இவ்வருடம் 5 ஆயிரம் நல்லின தென்னம் விதைகளைக் கப்பல் மூலம் கொண்டுவரும்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-77)

# வேலணையில் அரச திணைக்களங்களின் செயற்பாடு மந்தகதியிலாம்

## பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

(வேலணை)

வேலணையில் செயற்படும் அரச அலுவலகங்கள் தினமும் பிற்பகல் 3.00 மணியுடன் தமது அலுவல்களை நிறுத்தி விடுவதாக பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

தினமும் காலை 9.30 மணிக்கு அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு 3.00 மணிக்குள் பூட்டப் படுவதால் பொது மக்கள் தமது தேவைகளை நிறை வேற்ற முடியாது பெரிதும் இன்னலுறுகின்றனர்.

இவ்வாறான செயற்பாட்டிற்கு உயர் அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் ஊர்காவற்றுறையில் செயற்படும் பிரதேச செயலகம் தமது கடமைகளை நேரம் தவறாமால் கிரமமாக நிறைவேற்றி வருவதாக பொது மக்கள் தரப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-75)

# வேலணைப் பிரதேச சபையால் புதிய படகு கொள்வனவு

(வேலணை)

குறிகட்டுவான், நயினாதீவு இறங்குதுறைகளுக்கிடையில் சேவையில் ஈடுபடுத்துவதற்கென வேலணைப்பிரதேச சபை புதிதாக படகு ஒன்றைக் கொள்வனவு செய்யவுளது.

சுமார் எழுபத்தைந்து இலட்சம்ரூபாசெலவில் இப் புதிய படகு கொள்வனவு செய்யப்படவுள்ளதாக சபைத் தலைவர் திரு. நகருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார். இதற்கான நிதியை வடக்கிற்கான புனர்வாழ்வு புனர்நிர்மாணசபை (RRAN) வழங்கவுள்ளது. (எஸ்)

# பாடசாலைகள் மத்தியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(புலோலி)

கல்வித்திணைக்களம்யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 18வயதிற்குட்பட்ட போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டது இரண்டாம் இடம் வதிரிதேவரையாளி இந்துக்கல்லூரிக்குக்கிடைத்தது.

16வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது. இரண்டாம்இடம்யாழ். இந்துக்கல்லூரிபெற்றது.

போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றன. (க-52)

# நோர்வே திரைப்படவிழா ஒருவாரம் கொழும்பில் நிகழ்த்த ஏற்பாடு

(கொழும்பு)

நோர்வே நாட்டுத் திரைப் படவிழா ஒன்றினை கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இலங்கையில் முதலில் நடத்தப்படும் நோர்வே நாட்டு இத் திரைப்பட விழாவில் பல தலைசிறந்த படங்கள் திரையிடப்படவிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில் மார்ச் 31 தொடக்கம் ஏப்ரல் 6 வரை நடைபெறவிருக்கும் இவ் விழாவினை நோர்வேயின் பிரபல திரைப்பட இயக்குநர் டோறன் லியான் தொடக்கிவைப்பார். (து-எஸ்)

## சென்ற ஆண்டின் சிறந்த

# இந்து சமய நூல்களுக்குப் பரிசளிக்கல் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு

சென்ற வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர்31வரை வெளியான இந்து சமயம் பற்றிய நூல்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தகுதி வாய்ந்த நூல்களின் ஆசிரியர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

பரிசுத் தேர்வில் பங்குகொள்ள விரும்புவோர் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நூலின் 5 பிரதிகளையும் அஞ்சல் மூலமோ அன்றி நேரடியாகவோ இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கலாம்.

இதற்கான இறுதித்தினம் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி யாகும். (க-9)

# ஒலி நாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலா மன்றத்தின் "கல்வாரி இராகங்கள்" என்னும் ஒலிநாடா வெளியீட்டு விழா எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5மணிக்கு நடைபெறவுள்ளது.

திரு மறைக் கலா மன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ச)

# சிறிதரனுக்கு வதிவிட அனுமதி

(வவுனியா)

மனித உரிமைகள் ஆணைக் குழு வவுனியா மாவட்ட இணைப்பதிகாரி எஸ். சிறிதரனுக்கு 3 மாதகால பொலிஸ் வதிவிட அனுமதிப் பத்திரம் வவுனியாப்பொலிஸாரால் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

இவர் வவுனியாவிற்கு இடமாற்றம் பெற்று 2மாதங்களாகியும் பொலிஸ்வதிவிட அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை இது தொடர்பாக அவர் மேலிடத்திற்கு செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து விசேட பணிப்பின் பேரிலேயே இவ்வனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ச]

# இளவாலையில் மகாஞான ஒடுக்கம்

(இளவாலை)

தவக்கால நிகழ்வாக இளவாலைப் பகுதியில் கடந்த 12ம் திகதி முதல் அடுத்த மாதம் 23ம் திக திவரை மகாஞான ஒடுக்கம் நடத்தப்பட்டு வருகிறது. (க-12)

# பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(அச்சுவேலி)

கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் முதன் முறையாக முசைாராக் கல்வித் திட்டத்தின் கீழ் உடையமைத்தல், வீட்டுமின்னிணைப்பு போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் தலைமையில் முறைசாராக் கல்விச் செயல்திட்ட அலுவலரினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட மேற்படி பயிற்சி நெறிகளில் சுமார் 50 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். (க-14)

## நல்லூர் இளங்கலைஞர் மன்ற

# செயல்திட்டங்கள் விரிவுபடுத்தப்படும் பிரமுகர் தெரிவித்தார்

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் அடுத்த சில வருடங்களில் தமது செயற்திட்டங்களை விரிவு படுத்தப் போவதாக மன்றப்பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இசை வகுப்புக்கள், மாதாந்த இசை நிகழ்ச்சிகள், வருடாந்த இசைவிழாக்கள், மன்றப் புனருத்தாரணம் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ந)

# கவனிப்பாரற்ற நிலையில் சீரழியும் வவுனியா மணிக்கூட்டுக் கோபுரம்

வவுனியா நகர்ப்பகுதியில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தின் மணிக்கூடு நீண்டகாலமாக பிழையான நேரத்தையே காட்டிவருகின்றது. கவனிப்பற்ற நிலையில் கோபுரம் காணப்படுகிறது.

இதுபற்றி வவுனியா மாநகரசபை நடவடிக்கை ஏதும் எடுக்காது பாராமுகமாக இருந்து வருவது குறித்து பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி நிலைதோன்றியுள்ளது.

இம் மணிக்கூட்டை நியமமாகக் கொண்டு தமது தொழில் முயற்சிகளில்ஈடுபடும் பொது மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க-59)

# மட்டு, அம்பாறை மாவட்டங்கள் மூன்று புதிய பிர. செயலகங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மூன்று பிரதேச செயலகங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான விசேட அறிவித்தல்கள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் திணைக்களத்திலிருந்து அனுப்பப் பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கோரளைப்பற்று வடக்கு, மத்திய கோரளைப்பற்று, சாய்ந்தமருது போன்ற பகுதிகளிலேயே இத்தகைய பிரதேச செயலகங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் திணைக்கள வட்டாரங்களை ஆதாரம்காட்டி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட்டதும் இப்பகுதி மக்கள் தமது தேவைகளுக்காக நீண்ட தூரம் அலையவேண்டி இருக்காது என்றும் நம்பிக்கை வெளியிடப்படுகிறது. (க-60)

# வலிகாமத்தில் இரு வருடங்களில் 83 பேர் மிதிவெடியால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் வலிகாமம் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 83 பேர் மிதிவெடிகளில் சிக்கிப் பாதிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளிவிபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 1988 ஆம் ஆண்டில் இவ்வாறு 45 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். இவர்களில் இருவர் மரணமாகினர் ஒருவர்கைவிரலை இழந்தார் இன்னுமொருவர் கண்பார்வையை இழந்தார். ஏனையோர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

கடந்த ஆண்டில்மாத்திரம் மிதிவெடிகளில் சிக்கி யாழ். குடாநாட்டில் 38 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் 12 பேர் ஒருகாலை இழந்தனர். இருவர் கைவிரல்களை இழந்திருக்கின்றனர். (எஸ்)

# வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் கண்பரிசோதனை நடத்த முயற்சி

(பொலிகண்டி)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் கண்பரிசோதனை நிகழ்வை நடாத்தும் முயற்சியில் மேற்படி வைத்தியசாலை அபிவிருத்தி சபையினரும், வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். போதனாவைத்தியசாலை கண்வைத்திய நிபுணர் எஸ். குகதாஸ் இலவச கண் பரிசோதனையை நடாத்த முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, கெருடாவில், உடுப்பிட்டி, பொலிகண்டி இமையாணன் பகுதி மக்கள் இச்சேவை [illegible] பெரிதும் நன்மையடைவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கண்பரிசோதனை மேற்கொள்பவர்கள் தமது பதிவினை மு[illegible]யே மேற்கொள்ள வேண்டுமென வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர் தெரிவித்துள்ளனர். [க]

# சிறுவனுக்குப் பதில் பூனைகளை பழிவாங்கிய கருநாகம்

(புத்தளம்)

'பாலை ஊற்றிப் பாம்பைத் தான் [illegible]ம் கடிக்கத்தானே வந்திடும் அடித்துக் கொல்ல நேருமே என்று பழைய திரைப்படப் பாடலொன்றில் சில அடிகள் வருவது நினைவிருக்கலாம்.

இங்கே..புத்தளத்தில் சமீபத்தில் நிகழ்ந்துள்ள சம்பவம் ஒன்று பழிக்குப் பழிவாங்கும் பாம்பின் குணத்தை வெளிப்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

கருநாகப் பாம்பு ஒன்று தன்னைக் காலால் மிதித்த 9 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவனைப் பழிவாங்க அவனது வீடு தேடி வந்ததாகவும் மாணவன் காணப்படாததால் பக்கத்து வீட்டுப் பக்கமாகக் காணப்பட்ட மூன்று பூனைகளையும் ஆக்ரோஷமாகத் தீண்டியதாகவும் அதனால் அப்பூனைகள் பலியானதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# பிணிபல நீக்கும் 'அம்மான் பச்சரிசியை' நாளும் உட்கொண்டு நற்பேறடைவோம்

டாக்டர் ஏ. ஆர். என். துரைராஜ்

வயல், சாலை, அடர்த்தியாகக் காணப்படும் செடி கொடிகள் இருக்கும் இடங்களில் அம்மான் பச்சரிசி என்னும் செடியைப் பார்க்கலாம் பொதுவாக இந்தச் செடியைப் பலர் அறிந்திருப்பார்கள்.

இதில் வெள்ளை அம்மான் பச்சரிசி, சிவப்பு அம்மான் பச்சரிசி என்று இருவகை உண்டு. இந்த இரண்டிற்கும் ஒரே குணம்தான். இந்த அம்மான் பச்சரிசி பல பிணிகளைக் குணப்படுத்தும் ஆற்றல் வாய்ந்த மூலிகை.

உடல் எரிச்சல், மலபந்தம், நமைச்சல், தடிப்பு, மேகத் தடிப்பு, தேக காந்தல், தாய்ப்பால் சுரக்க, முகப்பரு, ஜலதோஷம், வெட்டைச் சூடு, வெள்ளை வெட்டை, மேகநோய், அம்மைத் தழும்பு ஆகியவற்றை நீக்க வல்லது.

அம்மான் பச்சரிசி இலையை ஒரு கைப்பிடி அளவு எடுத்து சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து அரைத்து. அரைத்ததை எடுத்து நெல்லி அளவு கொண்டு, பாலிலாவது அல்லது புளிப்புத் தயிரிலாவது கலந்து கலக்கி, அதிகாலையில் அருந்திவந்தால் நாளடைவில் மேகத்தடிப்பு, தேக காந்தல், மலக்கட்டு நீங்கும்.

அம்மான் பச்சரிசியை 25 கிராம் எடை அளவு எடுத்துச் சேமித்து வைத்துக் கொண்டு, இவைகளை சுத்தம் பார்த்து அம்மியில் வைத்துப் பசுப்பால் விட்டுப் பாலுடன் கலக்கி, காலை-மாலை அருந்திவந்தால் தாய்ப்பால் வற்றிய பெண்களுக்கு நாளடைவில் பால் நன்கு சுரக்கும்.

மற்றொரு வகை: பகல் உணவில் தினமும் தவறாமல்-அம்மான் பச்சரிசி இலையை எடுத்துச் சுத்தம் பார்த்து உணவில் நெய்விட்டுப் பொரியல் செய்து சாப்பிட நாளடைவில் தாய்ப்பால் சுரக்கும்.

தேவையான அம்மான் பச்சரிசி, கொஞ்சம் வசம்பு, இந்துப்பு சேர்த்து அம்மியில் வைத்து, சிறிது தண்ணீர் விட்டு அரைத்து, அரைத்ததை எடுத்து உடம்பில் தேய்த்துக் குளித்துவந்தால் நாளடைவில் அரிப்பும், தடிப்பும் மாறி நீங்கிவிடும்.

### முகப்பரு நீங்க

அம்மான்பச்சரிசி இலையை ஒரு கைப்பிடி எடுத்துச் சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்து இதனுடன் மஞ்சள் ஒரு துண்டு வைத்து, சிறிது தண்ணீர் ஊற்றி மைபோல் அரைத்து, அரைத்ததை எடுத்துக் கொண்டு முகத்தில் பூசி ஒரு மணிநேரம் கழித்து முகத்தை அலம்பி விடவும். இவ்விதமாக 3 வாரம் செய்துவந்தால் முகப்பரு நீங்கி முகம் அழகு பெறும்.

### ஓயாத இருமல் நீங்க

தேவையான அம்மான் பச்சரிசி இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து அம்மியில் வைத்துக் கொஞ்சம் தண்ணீர்விட்டு இடித்து அரை அவுன்ஸ் அளவு சாறு எடுத்து வடிகட்டி, அதில் சர்க்கரை சிறிது போட்டுக் கலக்கி, காலை வேளையில் மட்டும் 3 நாள் அருந்திவந்தால் இருமல் நீங்கி குணமாகும்.

குறிப்பு: மேலும் இருமல் காணப்பட்டால் இரண்டு

## சித்தமருத்துவத்தின் சிறப்பு

நாள் அருந்த முற்றிலும் குணமாகும்.

தேவையான அம்மான் பச்சரிசி இலையை இரண்டு கைப்பிடி அளவு எடுத்து சுத்தம் பார்த்து அரைத்து, அரைத்ததை எடுத்துக் கொட்டைப் பாக்களவு பசுவின் வெண்ணெயுடன் சேர்த்துக் கலக்கி அருந்தி வர, ஓயாத விக்கல் படிப்படியாக நீங்கி விடும்.

### ஜலதோஷம் நீங்க

அம்மான்பச்சரிசி இலையை நான்கு கைப்பிடி அளவு கொண்டுவந்து, சுத்தம் பார்த்து அம்மியில் வைத்துச் சிறிது நீர்விட்டு இடித்து, அரை அவுன்ஸ்சாறு எடுத்து, கொஞ்சம்சர்க்கரை போட்டு, காலை - மாலை 3 நாட்கள் அருந்திவந்தால் படிப்படியாக ஜலதோஷம் நிவர்த்தியாகும்.

அம்மான்பச்சரிசி இலையை சுமார் 250 கிராம் அளவு சேமித்துவைத்துக் கொண்டு, அதை வெயிலில் நன்கு சாயவைத்து, சுத்தமான உரலில் போட்டு இடித்து நன்கு பட்டுப்போல் தூள் செய்து எடுத்துக்கொண்டு மெல்லிய துணியில் கொட்டி வடிகட்டி, ஒரு காலி பாட்டிலில் சேமித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தேவையானபோது இத் தூளில் 5 கிராம் அளவு எடுத்து, அதே அளவு டைமண்ட் கற்கண்டுத் தூளை அதில் சேர்த்து, காலை – மாலை சாப்பிட்டு, இதனுடன்காய்ச்சிய பசுவின் பால் 200 மில்லி அருந்திவரவும் இவ்விதமாக அரைமண்டலம் (24 நாட்கள்) சாப்பிட தூம் புஷ்டி உண்டாகும்.

அம்மான் பச்சரிசி இலையைக் கொண்டுவந்து சுத்தம் பார்த்து, அதில் ஒரு கைப்பிடி அளவு எடுத்துக்கொண்டு அதனுடன் எள் நாலரை கிராம், சித்திரமூலிவேர் 18 கிராம், பெருங்காயம் 9 கிராம், பனைவெல்லம் 9 கிராம், தண்ணீர் 2 ஆழாக்கு அதாவது 400 மிலி சேர்த்து அடுப்பில் வைத்து ஒரு ஆழாக்காக – அதாவது 200 மில்லியாக ஆகும்வரை கண்டக்காய்ச்சி எடுத்து வடிகட்டி காலையில்மட்டும் 3 நாட்கள் அருந்தக் கொடுத்தால் நாளடைவில் ருதுவாகிவிடுவார்கள்,

### ஆணிக்கால் நோய்

ஆணிக்கால் நோய் உள்ளவர்கள். அம்மான் பச்சரிசிச் செடி இருக்கும் இடத்தில் சென்று அதன் அருகில் அமர்ந்து காலைச் சற்று உயரத்தில்வைத்துக்கொண்டு அம்மான் பச்சரிசிச் செடியின் காம்பை உடைத்தால் அதிலிருந்து பால்வரும். அந்தப் பாலை ஆணிக்கால் உள்ள பாதங்களின் மேல் நன்கு தடவ வேண்டும். இவ்விதமாகக் காலை - மாலை இரண்டு வேளையும் பூச வேண்டும்.

இந்தப் பாலை தொடர்ந்து ஒரு வாரம் தடவிவர, நல்ல பலன் கிடைக்கும்.

உத்தேச அளவில் அம்மான் பச்சரிசி இலையைக் கொண்டுவந்து சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து, நன்கு அரைத்த பிறகு எடுத்து இரண்டு அவுன்ஸ் அளவு நீராகாரத்தில் விட்டுக் கலந்து, இதனுடன் நல்லெண்ணெய் ஒரு அவுன்ஸ் சேர்த்து அனைத்தையும் கலக்கி, காலையில் மட்டும் ஒரு வாரம் சாப்பிட்டு வந்தால் நாளடைவில் வெட்டைச் சூடு தணிந்து உடல் நலம்பெறும்.

### வெள்ளை வெட்டை நீங்க

தேவையான அம்மான் பச்சரிசி இலையை ஆறுகைப்பிடி அளவு எடுத்துவந்து, சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து அரைத்ததைக் கொட்டைப் பாக்களவு எடுத்துக்கொள்ளவும். இதனுடன் பசுவின் மோர் 100 மில்லி எடுத்துக் கொண்டு, அதில் போட்டுக் கலக்கி அருந்தக் கொடுக்க வேண்டும். இவ்விதமாக 5 நாட்கள் காலை வேளையில் மட்டும் அருந்தவேண்டும். நாளடைவில் எல்லாவிதமான வெள்ளை வெட்டை நோய் நீங்கி உடல் நலம் பெறும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைக் கசிவுகூட நிற்கும்.

பத்தியம்: மீன், கருவாடு, அகத்திக்கீரை, சிறுகீரை, காப்பி, டீ அனைத்தும் நீக்கவும்.

இந்த மருந்தைச் சாப்பிடும்போது, வெறும் சாதம் மட்டும் சாப்பிடவேண்டும். மற்றும் துவரம் பருப்பை வறுத்து அரைத்து துவையல் போலச் சாப்பிடலாம். தூள் செய்தும் சாப்பிடலாம். வெறும் துவரம் பருப்பை அவித்து சாதத்துடன் சேர்த்து சாப்பிடலாம். பசுவின் பால் மட்டும் அருந்தலாம். இவ்விதமாக நடைமுறையில் சாப்பிட்டு வந்தால், வெள்ளை வெட்டை நீங்கி உடல் நலம்பெறும்.

தேவையான அம்மான் பச்சரிசி இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து, தேவைக்கு ஏற்றபடி இந்த இலையைக் கொட்டைப்பாக்களவு எடுத்து அம்மியில் வைத்து, பாதி எலுமிச்சம் பழச் சாற்றை விட்டு மைபோல் அரைத்து, அரைத்ததை எடுத்து 200 மில்லி நீராகாரத்தில் போட்டு, இதனுடன் நல்லெண்ணெய் ஒருதேக்கரண்டி அளவு அதாவது அரைக்கால் அவுன்ஸ் விட்டுக் கலக்கி, காலையில் மட்டும் 3 நாட்கள் அருந்திவந்தால் வெட்டை நோய் நீக்கி உடல் நலம் பெறும்.

அம்மான் பச்சரிசி இலைகளை அதிகமாக எடுத்து வந்து சுத்தம் பார்த்து, உணவில் பருப்புடன் சேர்த்துப் பொரியல் அல்லது கடையல் செய்து நெய் கலந்து அடிக்கடி உணவில் சேர்த்துவர, சிலர் முகத்தில் எப்போதும் காணும் வேர்வை வேர்க்காது. அதோடு, அம்மைத் தழும்பும் படிப்படியாக நீக்கி விடும்.

### மேக நோய் நீங்க

உத்தேச அளவில் அம்மான் பச்சரிசி இலை மூன்று கைப்பிடி, தூதுவளை இலை மூன்று கைப்பிடி, பொற்றலைக் கரிப்பான் மூன்று கைப்பிடி ஆகிய இவை அனைத்தையும் எடுத்து சுத்தம் பார்த்து, ஒரு மண் சட்டியில் போட்டு நெய் ஊற்றி வதக்கி, அம்மியில் வைத்து அரைத்து, அரைத்ததை எடுத்து நெல்லி அளவு உருட்டி, காலை, மாலை வாயில் போட்டு விழுங்கி, இதனுடன் மிளகுக் கஷாயம் அருந்தவேண்டும். இவ்விதமாக அன்று ஒரு நாளும், மற்றும் மறுநாள், கீழாநெல்லி மூன்று கைப்பிடி அளவு அம்மான் பச்சரிசி மூன்று கைப்பிடி அளவு எடுத்து அம்மியில் வைத்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து, நெல்லி அளவு உருட்டி எருமைத் தயிரில் கலந்து காலை, மாலை அருந்தவேண்டும். இவ்வாறு இரண்டு மருந்துகளையும் ஒரு நாளைக்கு ஒரு மருந்தாக மாற்றி மாற்றி சாப்பிட்டு வந்தால், மேகரோகமும் இந்திரிய இழப்பும் நீக்கும்.

அம்மான் பச்சரிசி இலையை 2 கைப்பிடி சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்துக் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி நன்கு அரைத்துக்கொண்டு, அரைத்ததை எடுத்து நெல்லி அளவில் இரண்டு உருண்டைகள் செய்து காலையில் ஒரு உருண்டை, மாலையில் ஒரு உருண்டை எடுத்து அரை தம்ளர் அளவு எருமைத் தயிரில் போட்டுக் கலக்கி அருந்துதல்வேண்டும். இவ்விதமாக ஒரு வாரம் தொடர்ந்து அருந்த இந்திரியம் (அதாவது: தாது, சுக்கிலம்) வீணாக வெளியேறாது.

### சிவப்பு அம்மான் பச்சரிசி

தேவையானதை எடுத்து நிழலில் உலர்த்தி, உலர்த்தியதை எடுத்து இடித்துச் சூரணம் செய்து (சூரணம் என்றால் தூள்) வைத்துக் கொண்டு வேளைக்கு 2 கிராம் வீதம் மோரில் கலக்கிக் குழந்தைகளுக்குக் கொடுக்க, மலத்தைப் போக்கும்.

இந்த இலையைத் தேவையான அளவு எடுத்து அரைத்துச் சுமார் ஒரு கழற்சிக்காய் அளவு எடுத்துப் பால் அல்லது மோரில் கலக்கிப் பெரியவர்களுக்கும் கொடுக்க, வெள்ளை வேட்டை மருந்துகளின் உஷ்ணம் இவைகள் போம். இதை அரைத்து ஊறலுடன் பரவுகின்ற படைகளுக்குப் பூச, குணமாகும்.

குறிப்பு: இந்த இனத்தில் பச்சை நிறமுடையது ஒன்று உண்டு. அதனைச் சிறு அம்மான் பச்சரிசி என்று கூறுவர்.

இதன் இலையுடன் சிறிது மிளகு சேர்த்து அரைத்துக் கொட்டைப்பாக்களவு தினந்தோறும் காலயில் கொடுத்து வர, 3 நாட்களில் நீர்ச்சுருக்கு, வெள்ளை இவைகள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யோகர் சுவாமிகள் திருவடி பூசை



உத்தியோகம் முதலிய யாவற்றையும் நாங்கள் கடவுளை அடைகிறதற்காகப் பாவிக்க வேணும். அப்படிப் பாவிக்கிறவன்எந்தவாழ்க்கையிலும் மனத் திருப்தியோடு வாழ்வான்.

இல்லறம் துறவறம் இரண்டும் மேன்மையே.

உங்களுடைய வேலைகளைச் செவ்வனே செய்யுங்கள், அதே யோகம்.

தன்னுடைய கடமையைச் செவ்வனே செய்வதனால் ஞானம் உண்டாகும்.

நாம் உமக்குத் தரக்கூடிய முதுசொம் 'எந்நேரமும் கடவுள் உம்முடனிருக்கிறார்' என்னும் உறுதி மொழியே.

ஆன்மலாப நோக்கத்தோடு சிவனடியார்கள் எவ்வளவு காரியங்களை ஈஸ்வரனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்கிறார்கள்.

எந்தப் பெரியவராயிருந்தாலும் இரவிலே வெளிச்சமில்லாமற் பார்க்க முடியாது. சில சமயங்களில் வெளிச்சமாயிருக்கும்.

இருதயம் சுத்தமாக இருக்கவேணும் இதற்கு மேலே எண்ணத்தைச் சொல்லலாம்.

யோகர் சுவாமிகள் திருவடி பூசை இரண்டாவது நாளாக சிவ தொண்டன் நிலயத்தில் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

## துடிப்புடன் துயரங்களை மறந்திடு தம்பி

அங்கவீனம் அணைதனை
அமைத்திடாது தம்பி
உங்கள் வாழ்க்கைக்கு
உலைவைக்காது தம்பி
எங்க சொல்லை
எப்பவும் சிந்தியும் தம்பி
நீங்கபடும் பாடு சிறிது
நீங்கலாம் தம்பி

மலை போன்ற சாதனைகள்
மனம் வைத்தால் செய்வாய் தம்பி
இலைமறை காய் போலே
இருக்காதே தம்பி
நிலையான பயிற்சிகள்
நிச்சயமாய்ப் பெறுதம்பி
கலையாத மனதுடன்
கச்சிதமாய் செய்வாய் தம்பி

இலக்கியத்தில் உதாரணம்
இன்னமும் இருக்குத் தம்பி
கலங்காமல் அவற்றை நீ
கருத்திற் கொள்வாய் தம்பி
கலங்காத ஹோமரும்
கதை பல படைத்தார் தம்பி
உலவியே இரட்டையரும்
உன்னதகவி தந்தார் தம்பி

முடிந்ததை நீயே
முழுமையாக மறந்திடு தம்பி
விடிந்த பின்னர் தம்பி
விளக்குந்தேடி அலையாதே தம்பி
படிப்பினையே விரும்பி
பக்குவமாய்ப் பெற்றிடு தம்பி
துடிப்புடன் செயற்பட்டே
துயரங்களைப் போக்கிடு தம்பி.

குப்பிளான் ஆ. மோகன்

(மார்ச்-16 இன்று அங்கவீனர் தினம்)

யாழ்ப்பாணம்

வெருவந்த செய்தொழுகும் வெங்கோலனாயின் ஒரு வந்தம் ஒல்லைக் கெடும் —

- குறள்

# வலம்புரி

## விழித்துக் கொண்டார்கள்

வாருங்கள் வடம்பிடிப்போம் என்பது எங்கும் ஒலிக்கும் சங்கதியாய்விட்டது. தூக்கத்தில் இருப்பவனை எழுப்புவது சுலபம். தூக்கம் போல்நடிப்பவனை எழுப்புவது கடினமே இன்றைக்கு நூலிழையில் ஊசலாடும் வாழ்வை உருப்படியாக்க எங்கும் எழுச்சி காணப்படுகிறது. உரியவர்கள் உறுதியாய் நிற்பதுபோல் தெரிகிறது. சமாதானத்தை நாடும் மக்கட் தொகுதியும் விழித்துக் கொண்டு தம்பங்கைச் செய்ய முனைப்பொடு முயல்கிறார்கள்.

எதுவரினும் நில்லேன் அஞ்சேன் என்ற நிலை அரசின் தலைமைப்பீடத்திடம் குடிகொண்டிருப்பது நல்ல சகுனமே. அந்த ஆணித்தரமான குரலுக்கு வலுவூட்டும் வகையில் வெகுஜன அமைப்புக்கள் விழித்துக்கொண்டுள்ளன ஆர்ப்பாட்டப் பேரணிகள் விழிப்புணர்வுமாநாடுகள் எல்லாம் சமாதானக் குழந்தையின் பிரவேசத்திற்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.

காலத்தால் அழியாத சாதனை ஒன்றைச் சந்திரிகா அம்மையார் தனதாக்கிக் கொள்ள வேண்டும். பெற்றோர் காலச் சூழ்நிலைக்குத் தாளம் போட்டு வளர்த்த நச்சுச் செடியை பிடுங்கி எறியும் பெற்றி பிள்ளைக்குஇருந்தாக வேண்டும். இது வாழ்வுச் சக்கரத்தில் மாறியோடும் மார்க்கம் தான் ஆதலால் அவரே கால்கோள் செய்ய வேண்டும். சமாதானக் குழந்தையைத் தொட்டிலிலிட்டு அமைதிக்கானம் பாடுவதற்கு

முகாரிபாடிய மக்களுக்கு நிம்மதி தரும் இனிய ஓசை கேட்க வேண்டும். காலம் காலமாக உகுத்த கண்ணீர்க் கதைகள் கரைந்தோட வந்த இறுதிச் சந்தர்ப்பத்தை இறுகப்பற்றிக் கொள்ள வேண்டும். இந்த வேளை ஒன்று அழிய வேண்டும். அதுதான் சுயநலப் பிசாசு. பொது நலத் தொண்டு என்று உதடுகள் உதிர்க்க மனம் சுய நலத்தின் சுருதி போடக்கூடாது

அத்தகைய அவலப் போக்கினாலேயே நாடு அரைப்பாலவனமாகிவிட்டது. எஞ்சிய நிலையும் சீர் கெடாது பார்த்துக் கொள்ளுதல் ஒவ்வொரு தேச பக்தர்களினதும் கடமையாகும்.

- அன்புடன் ஆசிரியர்

# பட்டம், பதவிகள் முக்கியம் அல்ல

# அன்பும், பண்பும் இணைவதே வாழ்வு

### யாழ். பல்கலை முதுநிலை விரிவுரையாளர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

பட்டமும் பதவியுமே வாழ்வின் இலக்குகளாக அமைய மாட்டாது, அன்பும், பணிவும் இணைந்து விட்டால் அதுவே வாழ்வின் இலக்கு என யாழ். பல்கலைக்கழக முதுநிலை இந்து நாகரீக விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தின விழாவை ஒட்டி யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் குழுவின் ஏற்பாட்டில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வாழ்வில் மனிதன் நிம்மதியாக வாழவேண்மானால், எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும். என்று நாடி ஓடத்தேவையில்லை. எங்கே பெண் இருக்கிறாளோ அங்கே நிம்மதியைக் காணலாம். எங்கே பெண் இருக்கிறாளோ அங்கே அமைதியைக் காணலாம் அன்பினை ஆளலாம்.

இதனைத் தான் வள்ளுவப் பெருந்தகை அன்றைக்கே இடித்துரைத்தான் இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை என்று.

இல்லாள் என்பவள் யார்? பணம், பொருள், வீடு, வாசல், விளைநிலம் இவற்றுடன் வந்தவள் உண்மையான இல்லாளாக மாட்டாள்.

அன்பு என்ற பண்பாட்டோடு வருபவளிடம் தான் உண்மையான நிம்மதியை எதிர் பார்க்க முடியும். அவள் தான் இல்லத்தின் இலக்கணம்.

அன்பும், பண்பும் இல்லாத பெண் உருவாக்கும் சமுதாயம் நெறி பிறழ்ந்து நிற்கும் வெறி பிடித்தசமூகமாக மாறி தறிகெட்டுச் செல்லும்.

மகளிர் கொள்கின்ற விழிப்புணர்வு தான் ஒரு மனிதனை சமூகத்தை ஏன் நாட்டையே விழிப்புணர்வு கொள்ளவைக்கிறது என்பதை எந்தவொரு பெண்ணுமே மறந்து விடலாகாது.

நாம் விழிப்புணர்ச்சி கொண்டால் நம்மை வதைக்கின்ற சீதனப் பிரச்சினையைத் தூர விரட்டலாம். ஏனைய கொடுமைகளில் இருந்து விடுதலை பெறலாம்.

மற்றவரைப் பார்த்து பிரச்சினைகளுக்கெதிராய் குரல் கொடுங்கள் என்று கூவி அழைப்பதை விடுத்து பெண்கள் தங்கள் அளவில் விழிப்புணர்வு கொள்ள வேண்டும். பெண்களுக்குள்ளேயே புரிந்துணர்வு கொண்டாலன்றி எங்கள் பிரச்சினைக்குத் தீர்வில்லை.

எங்கள் இதயத்தை மூடிவிட்டு, அயவலனுடைய இதயத்தை திறக்குமாறு கோருவது நியாயமா? ''நீ உன்னையே பார்'' என்ற சித்தர் வாக்கினை சித்தத்தில் நிறுத்தி செயலில் என்றைக்கு இறங்குகின்றோமோ அன்றைக்குத் தான் பெண்களான எமக்கெல்லாம் விடிவு வரும் பொன்னாள் என்றார் (க-9)

## பல்கலைக்கழக தெரிவில் மாற்றம் விரைவில் அமுல்ப்படுத்த நடவடிக்கை

[கொழும்பு]

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் முறையில் மாற்றம் கொண்டுவரப்பட இருக்கிறது.

இதற்கமைய பல்கலைக் கழகங்களுக்கு மாணவரைத் தெரிவு செய்வதற்கான புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதென கல்வி. உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்

தற்போதுள்ள, மாவட்ட மட்ட ரீதியில் மாணவரை அனுமதிக்கும் முறையினால் பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுவதாக கல்விமான்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டியதனை அடுத்தே புதியமுறை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரியவருகிறது.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பது தொடர்பாக ஆராய்ந்து முடிவுகளைச் சமர்ப்பிப்பதற்கென குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (க-9)

## உரும்பிராய், ஊரெழு பகுதிகளில் தொடரும் திடீர் மின்வெட்டு

### பாவனையாளர்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

வலி-கிழக்கில் குறிப்பாக உரும்பிராய் ஊரெழுப் பகுதிகளில் கடந்தசில தினங்களாக மின் விநியோகம் இரவு, பகல் வேளைகளில் முன்னறிவித்தல் ஏதுமின்றி நீண்டநேரத்துக்குத் துண்டிக்கப்படுகின்றது என்று அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

பத்திரிகைவாயிலாக முன்னறிவித்தல் விடுத்து குறிப்பிட்ட நேரத்துக்கு முக்கிய தேவைகருதி மின்துண்டிப்பை மேற்கொள்வது வேறு, அதை விடுத்து இவ்வாறு நினைத்த மாத்திரத்திலெல்லாம் திடீர் திடீரென மின்விநியோகத் துண்டிப்பை மேற்கொள்வது எந்தவகையில் நியாயமாகும் என பாவனையாளர்கள் அங்கலாய்க்கின்றனர். (எஸ்)

### ஆண்டு ஐந்து புலமைப் பரிசில்

## முன்னோடிப் பரீட்சை 18 ஆம் திகதி தீவகத்தில் நடாத்த துரித ஏற்பாடு

### 700 மாணவர்கள் தோற்றுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக தீவக மாணவர் அபிவிருத்தி கழகத்தினர் மாணவர் நலன் கருதி ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையினை எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை நடாத்தவுள்ளனர்.

தீவகத்தில் உள்ள 41 பரீட்சை நிலையங்களிலிருந்து சுமார் 700 மாணவர்கள் வரையில் மேற்படி பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

பரீட்சைக்கான வினாத் தாள்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், விடைத்தாள் திருத்தும்பணி பூர்த்தியடைந்ததும் மாணவர்கள் பெற்ற புள்ளிகளைப் பட்டியலிட்டு அனுப்புமாறு பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

அதி உயர்ந்த புள்ளிகள் பெறும் மாணவர்களிற்கு பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும் எனவும் மேற்படி அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (க)

### கலாச்சாரப்பரிவர்த்தனையை ஏற்படுத்த

## திருமலையைச் சேர்ந்த மாணவர்கள் மாத்தளைக்கு நேரில் விஜயம்

[திருகோணமலை]

உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த 40 மாணவர்கள் ஐந்து ஆசிரியர்கள், மூன்று பெற்றோர் அடங்கிய குழுவொன்று கடந்த வாரம் மாத்தளை ம. வித்தியாலயத்திற்குச் விஜயம் செய்துள்ளது.

கலாச்சாரபரிவர்த்தனையை மாணவர் மத்தியில் ஏற்படுத்தி அதன் மூலம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதே இவ்விஜயத்தின் நோக்கமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இராஜகோபுர திருப்பணிச் சபை

(வேலணை)

வேலணை பெருங்குளம் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு இராஜகோபுரம் அமைப்பதற்கு திருப்பணிச்சபை ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது. 1988ம் ஆண்டு ஓர் சபை அமைக்கப்பட்டு ஆரம்பகட்ட வேலைகள் நடைபெற்று வந்த வேளையில் இடம்பெயர்வு காரணமாக அவ் வேலைகள் இடை நிறுத்தப்பட்டன.

மீண்டும் இத் திருப்பணிச் சபையை மீள புனரமைப்பு செய்து இராஜகோபுர திருப்பணி வேலைகளை முன்னெடுப்பதற்கு ஆலய நிர்வாகம் நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றது. (எஸ்)

## மஹோற்சவமும் வெள்ளோட்டமும்

(நீர்வேலி)

இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் கோயில் முதலாவது மஹோற்சவம் இம்மாதம் 8ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இம்மாதம் 18ம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 19ம் திகதி ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று 21ம் திகதி பூங்காவனத்திருவிழாவும் நடைபெறவுளளது. (க-110)

## பரிபாலனச் சபை பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் 'கொட்டடியம் பதி' அருள் மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலனச் சபை பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு தலைவர் மா. சிவராசா தலைமையில் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ)

## அதிபர்பதவிக்கு வெற்றிடம்

(இணுவில்)

வலிகாமம் கல்வி வலயத்தின்கீழ் இயங்கும் யாழ். உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம், யாழ். அராலி வடக்கு அ. மி. த. க. பாடசாலைகளிற்கு அதிபர்பதவிகளிற்கான வெற்றிடம் நிரப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பதவிக்கு தகுதிவாயந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-49)

## ஓய்வுபெறும் அதிபர்

(அச்சுவேலி)

யாழ். கோப்பாய் மகா வித்தியாலய அதிபர் திருமதி செ. நவரத்தினம் கடந்த 14 ஆம் திகதியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் ஓய்வு பெற்றுள்ளதை அடுத்து புதிய அதிபராக அ. அகிலதாஸ் கடமையேற்றுள்ளார். (க-57)

## சாயி அருளமுதம்

### நம்பிக்கை



முதலில் உன்னிடம் உன் திறமையில் நம்பிக்கையை வளர்த்துக் கொள். நாம் உண்மையை அறிய முயற்சி செய்வோம். வாழ்க்கை தொடர்ச்சியான பிரவாக ஓட்டம். முடிவில்லாமல் ஓடிக் கொண்டிருக்கிறது. இதன் முடிவு என்ன? கடலில் சங்கமம் ஆவது தான் இதன் முடிவு. இந்தப் பிரவாகத்திற்கு இரு கரைகள் உண்டு. அஷ்டாட்சர நாமங்கள் அவை. ஓம் நமோ நாராயணாய என்று அதைக் கூறுவர். வேறு விதமாகக் கூறினால், ஒன்று ஆத்-மா-ந-ஸம்-ஸ-ய-தே (சந்தேகம் இல்லாமல் இரு) மற்றொரு கரை ச்ரத்-தா-வால்-ல-பதே-ஞா-னம். (ச்ரத்தை-நிலையான மனம்-உள்ளவன் ஞானத்தைப் பெறுகிறான்) ஆகவே, மனதில் தம்மைப்பற்றிச் சந்தேகங் கொள்ளலாகாது. சந்தேகம் இருந்தால் கட்டாயம் அழிந்து விடுவோம். சந்தேக மனங்கொண்டவன் எந்தச் சிறு முயற்சியிலும் முன்னேற இயலாது. சந்தேகத்துக்கு இடங்கொடுக்காதீர்கள்.

கடவுள் மேல் பக்தியை வளர்த்துக்கொள்ள வேண்டும். இந்த முறையில் நாம் வாழ்க்கை நடத்திச் செல்ல வேண்டும். இம்முறையையே இலட்சியமாகக் கொள்ளவேண்டும்.

வடக்கு-கிழக்கு வைத்தியர்களின்

# இடர் காலக் கொடுப்பனவு

# தொழிற் சங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் தமக்கு இடர்கால கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட வுள்ளனர்.

இன்னமும் பத்து நாட்களுக்குள் இடர்காலக்கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்கள் காலக்கெடு விதித்துள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்திருப்பதாகவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வேறுமாவட்டங்களில் இருந்து வந்து வடகிழக்கில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு மாத்திரம் இடர்கால கொடுப்பனவு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. ஆனால் வடகிழக்கில் வசிக்கும் மருத்துவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கவில்லை என்றும் இது அநீதியாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஏனைய பகுதிகளிலிருந்து வந்து கடமைபுரியும் வைத்தியர்கள்எதிர்நோக்கும் அதே அளவு பிரச்சினையை அங்கு வசிக்கும் வைத்தியர்களும் எதிர்நோக்குகின்றனர். எனவே அவர்களுக்கும் இடர் காலக் கொடுப்பனவு வழங்க வேண்டும் இன்றேல் தொழிற் சங்க நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் குறிப்பிட்டார். (வ)

## இளைஞன்---

றும் வீட்டில் இருந்த வேளையில் இவர் கைது செய்யப்பட்டதாகவும் கைது செய்தமைக்கான ரசீது இராணுவத்தால் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-03)

## மன்னார்க்---

திரகுமார்) யாழ்ப்பாணம், மேஜர் மதன் (சிதம்பரநாதன் சுவாமிநாதன்) திருமலை, தினேஸ் (வைரவநாதன்சதான்)யாழ்ப்பாணம் ஆகிய போராளிகள் உயிரிழந்ததாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ச-103)

## அ: அதிபர்---

யாளர்கள் ஆகியோருடனான சந்திப்பு இடம் பெற்றது.

இச் சந்திப்பில் ஒவ்வொரு திணைக்களங்களினதும் பிரச்சினைகள் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை, நூலகம் உள்ள பாடசாலைகள், கணனி உள்ள பாடசாலைகள் போன்ற விபரங்களைக் கேட்டறிந்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக் குறைபாடுகளான மருத்துவ உபகரணமின்மை, மருந்துத்தட்டுப்பாடு குறித்து வைத்திய சாலைப் பணிப்பாளர் செல்வி கனகரத்தினம் எடுத்துக் கூறினார்.

யாழ்ப்பாணத்தில்10 வருடமாக உரம் இல்லாமை பற்றியும் விவசாய ஆராய்ச்சிகள் நடைபெறாமை பற்றியும் விவசாயத்திணைக்கள அதிகாரிகள் எடுத்துக் கூறினர்.

நேற்று மாலை யாழ்ப்பாணத்திலுள்ள பிரதேச சபை, நகரசபைத் தலைவர்களையும் தனித்தனியே இவர் சந்தித்தார்.

## பிணிபல---

போம்.

இதனை மருந்துகளின் வேகம் தனிக்கவும் கொடுப்பதுண்டு. நகச் சுற்றில் உண்டான ரணங்களுக்கு இதன் பாலைத் தடவிவர விரைவில் ஆறும்.

## சமாதானம்---

அடைந்தது.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

மாலை 4.30 மணிக்கு ஆரம்பமான பேரணி 5.45 மணிக்கு முடிவுற்றது.

இவ் ஊர்வலத்தில் சுலோகங்களும் பதாதைகளும் ஊர்வலத்தில் கலந்து கொண்டோரால் தாங்கிச் செல்லப்பட்டன.

## யுத்தக்---

ராதபுர பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ கரளியத்த ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இவர்கள் வன்னி செல்வதற்காகப் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளனர்.

எனினும் இவர்களின் வன்னி விஜயம் தொடர்பாகத் தமக்கு அரசின் உத்தியோக பூர்வமான அறிவித்தல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் குரல்தரவல்ல அதிகாரி ஹர்ஸா குணவர்த்தனா தெரிவித்தார். (ந)

## இராஜகிரியா...

களைக் கொண்டே சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக இதுவரை 17 பேர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான விசாரணைகளை தொடர்ந்து நடைபெற்றுவருவதாக குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் பந்துலவிக்கிரமசிங்க தெரிவித்தார். (வ)

## புலோலியில் சைக்கிள் விபத்து சிறுவனுக்குப் படுகாயம்

(புலோலி)

புலோலி சிங்க நகரில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளார்.

புலோலி தெற்கு சிங்க நகரைச் சேர்ந்த நரசிங்கன் சத்தியரூபன் (வயது 13) என்ற சிறுவனே படுகாயம் அடைந்து பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போத வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-52)

## பொங்கல் நிகழ்வு

திருநெல்வேலி மேற்கு பத்திரகாளி அம்மன் தேவஸ்தான வருடாந்தப்பொங்கல் நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

விசேட அபிஷேக ஆராதனைகள் நடை பெற்றதுடன் ஆலய உட்பிரகார மண்டபத்தில் அடியார்கள் பொங்கித் தமது நேர்த்திகளை நிறைவு செய்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்ததுடன் பெருமளவு மககள் இந்நிகழ்வில் கலந்து கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது'

## பொ.ஐ.மு.---

இணக்கம் காணப்படுமென அரசியல் அவதானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

பொதுஜன ஐக்கியமுன்னணியின் குழுவுக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவும் தலைமை தாங்குகிறார்கள்.

இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு அடித்தளமாக 1997 ஆம் ஆண்டு அரசு சமர்ப்பித்த யோசனைகளே முக்கிய இடம் பெறவுள்ளதாக அறிவுக்கப்படுகின்றது. (வ)

## தொடம்---

அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நெலுக்குளம் வாசியான பொன்னையா சுரேஷினி (வயது-24)சாஸ்திரி கூழாங்குளத்தைச் சேர்ந்தவர்களான தர்மராசா ராதிகா (வயது-16) பொன்னுச்சாமி சிவராசா(வயது-20)வேப்பங்குளம் வாசியான காளிமுத்து கோவிந்தராஜ் (வயது-28) ஆகியோரே வெள்ளை வானில் வந்தோரல் கடத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதுதவிர ஆரியதாஸ் அன்ரனி(வயது-35) என்பவரும் காணாமல் போய்யுள்ளார் இவர்களில் சுரேஜினி படையினர் வசம் இருப்பதாகவும் இன்று விடுதலைசெய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆர்ப்பாட்ட---

டன் பேச்சு வேண்டாம்.

★ இரத்தக் கறை தோய்ந்த உனது கைகளை சுத்தமாக வைத்துக்கொள்.

★ ஜனாதிபதி சந்திரிகா எதிர்க்கட்சித்தலைவர் ரணில் சமாதானம் பேசி மக்களைப் பலிக்கடா ஆக்காதீர்.

★ நோர்வே அரசுடனான உனது தொடர்புகளை ரத்து செய்.

பாஸ் நடைமுறையை கண்டித்து

## 20ஆயிரம் பேர் கையெழுத்திட்ட மகஜர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பு

(கல்முனை)

மட்டக்களப்பில் நடைமுறைக்கு வரப்படவுள்ள உத்தேச வதிவிட அனுமதி பத்திர முறையானது விடுவிக்கப்படாத பிரதேச மக்களை திறந்த வெளிச் சிறைச் சாலைக்குள் தள்ளுவதாக அமையும்.

இவ்வாறு மட்டக்களப்பில் வதிவிட அனுமதிப்பத்திர நடைமுறை அமுலுக்கு வருவதை எதிர்த்து 20 ஆயிரம் பேர் கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரையம்பதி பிரதேச செயலர் பிரிவில் சேகரிக்கப்பட்ட கையெழுத்துகள் அடங்கிய இம்மகஜரை மண்முனைப்பற்று பிரதேச அபிவிருத்தி சபைத் தலைவர் றொபோட் நவரெட்ணராஜா மாவட்ட அரசஅதிபர் ஏ. கே. பத்மநாதனிடம் நேற்று கையளித்தார்.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இந்த வதிவிட அனுமதிபத்திர நடைமுறை அடிப்படை மனித உரிமைமீறல் எனவும் வதிவிட அனுமதிப்பத்திர விண்ணப்பப்படிவத்தில் கைரேகை அடையாளம் கேட்கப்பட்டிருப்பதாவது தமிழர்களை நம்பாத தன்மையை எடுத்துக் காட்டுவதாகவும்

இதனால் தமிழ் மக்கள் பலவிதமான கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி இருப்பதாகவும் அம மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-ச)

## இந்தியப்பிரதித் தூதுவர் திருப்பதி யாழின் பல இடங்களுக்கும் செல்வார்

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ள இலங்கைக்கான இந்திய பிரதித் தூதுவர் இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களுக்கும் செல்லவுள்ளார்.

இன்று காலை 8 மணிக்கு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் செல்லும் பிரதித்தூதுவர் திருப்பதி சைவவித்தியா விருத்திச் சங்க சிறுவர் இல்லத்திற்கு செல்வார்.

பின்பு யாழ் போதனா வைத்தியசாலைக்குச் சென்று பின் ஊர்காவற்றுறை சென்று அங்கிருந்து 10 மணிக்கு நெடுந்தீவுக்குப் பயணம் மேற்கொள்ளும் இவர் பிற்பகல் 4 மணிக்கு அங்கிருந்து திரும்பி கைதடி, சாவகச்சேரி வைத்தியசாலைகளுக்கும் செல்லவுள்ளார்.

நாளை தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கும் 11 மணிக்கு பருத்தித்துறை இராமகிருஸ்ண சேவாச்சிரமத்திற்கும் சென்று அங்கிருந்து காங்கேசன்துறை செல்லும் திருப்பதி அங்கே வடபிராந்திய கடற்படைத் தளபதியைச் சந்திப்பார்

## கட்டுத்துவக்கால் சுட்டவரை இராணுவம் கைதுசெய்தது

[யாழ்ப்பாணம்]

பளை இத்தாவில் என்னும் இடத்தில் தனிப்பட்ட பிரச்சினை ஒன்றில் ஏற்பட்ட தகராற்றினால் ஒருவர் கட்டுத்துவக்கினால் சுடப்பட்டு காயம் எதுவும் இன்றி தப்பியுள்ளார்.

கடைத்தகராறு காரணமாகவே இச்சூட்டுச்சம்பவம் இடம்பெற்றதாகவும் மேற்படி துப்பாக்கிநபர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## ஜனாதிபதியின்---

பிய செய்திஸ்தாபனம் ஒன்று தெரிவித்துள்ளது.

Sar Eastrn Economic Revew என்ற பத்திரிகைக்கு பேட்டி அளிக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் எனக்கூறும் அவ்வறிக்கை அன்ரன்பாலசிங்கம் நோர்வேயில் சிறுநீரக சத்திர சிகிச்சைபெற்றது உண்மை, ஆனால் அது நோர்வே அரசின் மனிதாபிமான உதவியே எனவும் தெரியவந்துள்ளது.

அன்ரன் பாலசிங்கம் இலங்கை அரசிடம் அனுமதி கோரவில்லை என்றும் இதக்கும் பேச்சுவார்த்தைக்கும் தொடர்பில்லை என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாக ஐரோப்பிய செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

## பாதுகாப்புத்--

தென்கிழக்காசியாவின் கேந்திர மத்திய நிலையமாகமாற்றும் திட்டத்திற்கமையவே இத்தலைமையகம் இடமாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அனுமதியை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்க வழங்கியுள்ளதாகவும் இவற்றிற்காககட்டடம் அமைப்பதற்கு வெத்தரமுல்ல அக்குரக்கொடவில் 65ஏக்கர் காணி அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-ச)


**கண்ணீர் அஞ்சலி**

பருத்தித்துறைச் சட்டத்தரணிகள் சங்க
முன்னாள் தலைவரும்,
தற்போதைய மல்லாகம் மாவட்ட
நீதிபதியுமான
திரு சு. பா. சுப்பிரமணியம் அவர்களின்.
தாயார்

**திருமதி விஜயலக்சுமி பாலசிங்கம்**
**அவர்களின்**

மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

அங்கத்தவர்கள்
(00238) பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம்.



**கண்ணீர் அஞ்சலி**

சட்டத்தரணி திரு சு. பரமராசா
அவர்களின் தந்தையார்

**திரு சுப்பிரமணியம் அவர்கள்**

கொழும்பில் காலமானதையிட்டு எமது கண்ணீர்
அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

அங்கத்தவர்கள்
பருத்தித்துறை
சட்டத்தரணிகள் சங்கம்.
[00237]


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.